**ஆட்சி எல்லை – மதுரை மாவட்டம் – மதுரை கோட்டத்தைப் பிரித்து மேலூரில் புதிய கோட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.**

**வருவாய் [வ.நி.1(1)] துறை**

**அரசாணை (நிலை) எண்.63** **நாள்:09.02.2016**

**படிக்கவும்:**

1. அரசாணை எண்.279, வருவாய்த் துறை, நாள் 09.06.2003
2. அரசாணை (2டி) எண்.176, வருவாய்த் துறை, நாள் 15.06.2012.
3. மாவட்ட ஆட்சியர், மதுரை கடித எண். ந.க.எண்.27821/2014/ஜி2, நாள் 9.7.2014.
4. கூடுதல் தலைமைச் செயலர் (ம) வருவாய் நிருவாக ஆணையர் கடித எண். ந.க. பணி. 6(2)/25456/2014, நாள் 27.03.2015.

---

**ஆணை:-**

மதுரை மாவட்டம், மதுரை கோட்டத்தைப் பிரித்து மேலூரில் ஒரு புதிய வருவாய் கோட்டம் உருவாக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 31.08.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–இன் கீழ் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, மதுரை மாவட்ட ஆட்சியர் தனதறிக்கையில், மதுரை கோட்டம் தற்பொழுது ஏழு வட்டங்களுடன் இயங்கி வருவதால், முக்கிய பணிகளில் சிரமமான நிலை ஏற்படுவதாகவும், மகத்தான மக்கட்சேவையில், தொய்வு ஏற்படா வண்ணம் தற்போதுள்ள ஏழுவட்டங்களை உள்ளடக்கிய மதுரை கோட்டத்தை இரண்டாகப் பிரித்து மதுரை கோட்டம் மற்றும் மேலூர் கோட்டம் (இ) ஒத்தக்கடை என்ற புதிய கோட்டம் உருவாக்கலாம் எனவும் மதுரை கோட்டத்தில் தற்போது மதுரை தெற்கு, மதுரை வடக்கு, மதுரை மேற்கு, மதுரை கிழக்கு, திருப்பரங்குன்றம், மேலூர் மற்றும் வாடிப்பட்டி ஆகிய ஏழு வட்டங்கள் செயல்பட்டு வருவதாகவும், பொதுமக்களுக்கு விரைவான சேவை அளித்திடும் பொருட்டும், நிருவாக நலன் கருதியும், மதுரை வருவாய் கோட்டத்தைப் பிரித்து புதிய மேலூர் கோட்டம் உருவாக்கலாம் என தெரிவித்துள்ளார்.

3. மதுரை மாவட்டம், மதுரை வருவாய் கோட்டத்தினைப் பிரித்து புதிய மேலூர் வருவாய் கோட்டம் உருவாக்குவதற்கான ஆட்சி எல்லை விவரங்கள் பின்வருமாறு:–

| வ எண் | ஆட்சி எல்லை விளக்கங்கள் | தற்போது உள்ளபடி | உத்தேச பிரிவினைக்கு பின் வருவாய் கோட்டம் | | அரசாணை எண்.279, வரு. நாள்: 09.06.2003-ன்படி குறித்த நிலைப்படி |
|---|---|---|---|---|---|
| | | மதுரை | உத்தேசிக்கப்பட்ட கோட்டம் | எஞ்சிய கோட்டம் | - |
| | | | மேலூர் | மதுரை | |
| 1 | தலைமையிடம் | மதுரை | மேலூர் | மதுரை | - |
| 2 | மக்கள் தொகை | 2409148 | 1054862 | 1354286 | குறைந்த அளவு 4,00,000 முதல் அதிக அளவு 15,00,0000 |
| 3 | பரப்பளவு | 1671.42 | 985.1 | 686.32 | குறைந்த அளவு 1000ச.கி.மீ அதிகளவு 4500 ச.கி.மீ |
| 4 | வருவாய் கோட்டத்தின் பெயர் | மதுரை | மேலூர் | மதுரை | |
| 5 | சட்டமன்ற தொகுதி | 188. மேலூர்<br>189 .மதுரை கிழக்கு<br>190. சோழவந்தான்<br>191. மதுரை வடக்கு<br>192. மதுரை தெற்கு<br>193. மதுரை மத்தியம்<br>194. மதுரை.மேற்கு<br>195.திருப்பரங்குன்றம் | 188.மேலூர்<br>189.மதுரை கிழக்கு<br>192.மதுரை தெற்கு | 190.சோழவந்தான்<br>191. மதுரை வடக்கு<br>192. மதுரை தெற்கு<br>193.மதுரை மத்தியம்<br>194.மதுரை மேற்கு<br>195.திருப்பரங்குன்றம் | |
| 6 | பாராளுமன்ற தொகுதி | மதுரை<br>விருதுநகர்<br>தேனி | மதுரை<br>விருதுநகர் | தேனி | |
| 7 | மாநகராட்சி எண்ணிக்கை | 01 மதுரை | 01 மதுரை | 01 மதுரை | |
| 8 | வட்டங்களின் எண்ணிக்கை | 1. மதுரை வடக்கு<br>2. மதுரை கிழக்கு<br>3. மதுரை தெற்கு<br>4. மதுரை மேற்கு<br>5. திருப்பரங்குன்றம்<br>6. மேலூர்<br>7. வாடிப்பட்டி | 1.. மதுரை கிழக்கு<br>2. மதுரை தெற்கு<br>3.மேலூர் | 1.மதுரை வடக்கு<br>2.மதுரை மேற்கு<br>3.திருப்பரங்குன்றம்<br>4.வாடிப்பட்டி | குறைந்த அளவு இரண்டு வட்டங்கள் |
| 9 | நகராட்சி எண்ணிக்கை பெயர் | 01.மேலூர் | 01.மேலூர் | | |
| 10 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | மேலூர்<br>கொட்டாம்பட்டி<br>மதுரை கிழக்கு<br>மதுரை மேற்கு<br>வாடிப்பட்டி<br>அலங்காநல்லூர்<br>திருப்பரங்குன்றம் | மேலூர்<br>கொட்டாம்பட்டி<br>மதுரை கிழக்கு | மதுரை மேற்கு<br>வாடிப்பட்டி<br>அலங்காநல்லூர்<br>திருப்பரங்குன்றம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | டவுன் பஞ்சாயத்துக் களின் எண்ணிக்கை | அ.வல்லாளபட்டி<br>பரவை<br>சமயநல்லூர்<br>வாடிப்பட்டி<br>அலங்காநல்லூர்<br>பாலமேடு<br>சோழவந்தான் | அ.வல்லாளபட்டி | பரவை<br>சமயநல்லூர்<br>வாடிப்பட்டி<br>அலங்காநல்லூர்<br>பாலமேடு<br>சோழவந்தான் | |
| 12 | உள்வட்டங்களின் எண்ணிக்கை | 34 | 18 | 16 | |
| 13 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 402 | 206 | 196 | குறைந்தபட்சம் 100 கிராமங்கள் |
| 14 | கிராம பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | 226 | 197 | 29 | |
| 15 | தலைமையிடத்தில் இருந்து வெகு தொலைவில் உள்ள கிராமத்தின் தூரம் | சூரப்பட்டி கிராமம் 60 கி.மீ | சூரப்பட்டி கிராமம் 60 கி.மீ | வலையப்பட்டி கிராமம் 50 கி.மீ | |

4. முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் தனதறிக்கையில், அரசாணை எண்.279, வருவாய்த்துறை, நாள் 09.06.2003–ல் நிர்ணயிக்கப்பட்ட பரப்பளவைத் தவிர ஏனைய அனைத்து அளவுகோல்களும் பூர்த்தி செய்கின்றன எனவும், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையினை ஏற்று, மதுரை கோட்டத்தினைப் பிரித்து புதிய மேலூர் (இருப்பு) ஒத்தக்கடை என்ற கோட்டத்தை உருவாக்கவும், புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மேலூர் வருவாய் கோட்டத்திற்கு மொத்தம் 13 பணியிடங்கள் உருவாக்கவும், வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினம் ரூ.28,11,900/–ம் மற்றும் தொடரா செலவினம் ரூ.10,26,000/–ம் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

(i) மதுரை மாவட்டத்திலுள்ள, மதுரை வருவாய்க் கோட்டத்தை பிரித்து புதிய மேலூர் வருவாய் கோட்டம் (இருப்பு) ஒத்தக்கடை உருவாக்கப்படுகிறது.

(ii) புதியதாக உருவாக்கப்படவுள்ள மேலூர் கோட்டதிற்கு மொத்தம் 12 பணியிடங்கள் புதியதாக உருவாக்கப்படுகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம் / தற்காலிகம் | மதுரை கோட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | மதுரை கோட்டத்தில் நிறுத்தி வைக்க வேண்டிய பணியிடங்கள் | மேலூர் கோட்டத்திற்கு மாற்றம் செய்யும் பணியிடங்கள் | மேலூர் கோட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | மேலூர் கோட்டத்திற்கு அனுமதிக்க வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 (6+7) |
| 1 | வருவாய் கோட்ட அலுவலர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | வருவாய் கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளர் (வட்டாட்சியர் நிலை) | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | தலைமை உதவியாளர் (துணை வட்டாட்சியர் நிலை) | நிரந்தரம் | – | – | – | – | – |
| 4 | உதவியாளர் | நிரந்தரம் | 3 | 3 | – | 3 | 3 |
| 5 | இளநிலை உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | – | 2 | 2 |
| 6 | தட்டச்சர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 7 | சுருக்கெழுத்தர் | நிரந்தரம் | – | – | – | – | – |
| 8 | பதிவறை எழுத்தர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 9 | அலுவலக உதவியாளர் | நிரந்தரம் | 2 | 2 | – | 2 | 2 |
| 10 | இரவுக்காவலர் | நிரந்தரம் | 1 | 1 | – | – | – |
| 11 | ஈப்பு ஓட்டுநர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 12 | மசால்ஜி | நிரந்தரம் | 1 | 1 | – | – | – |
| 13 | தோட்டக்காரர் | நிரந்தரம் | – | – | – | – | – |
| மொத்தம் | | | 13 | 13 | – | 12 | 12 |

(iii) தற்போதுள்ள மதுரை கோட்டத்திற்கு 13 பணியிடங்கள் மட்டும் தொடர அனுமதிக்க வேண்டும்.

(iv) மசால்சி மற்றும் இரவுக்காவலர் பணியிடங்களை அரசாணை (நிலை) எண்.49, ப(ம)நிசீ துறை, நாள் 14.5.2002–ன்படி வெளிமுகமை மூலம் நிரப்பப்பட வேண்டும்.

(v) ஓட்டுநர் பணியிடம், அரசு கடித (நிலை) எண்.121/P/2006-1, ப(ம)நிசீ துறை, நாள் 10.8.2006 மற்றும் அரசாணை (நிலை) எண்.255, ப(ம)நிசீ துறை, நாள் 06.12.2007–ன்படி டெக்ஸ்கோ நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.

(vi) மற்ற அனைத்து பணியிடங்களும் நிரப்பப்படும்போது உரிய விதிகள் மற்றும் அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(vii) புதியதாக உருவாக்கப்படும் மேலூர் கோட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு ஏற்படும் தொடரும் மற்றும் தொடரா செலவினங்களுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

**<u>தொடரும் செலவினம்:</u>**

| வ. எண். | விவரம் | ரூ. |
|---|---|---|
| 1. | பணியாளர்களின் ஊதியம் (புதிய ஊதிய ஏற்ற முறையில்) (ஆண்டு ஒன்றுக்கு) | 33,94,548 (12 பணியிடங்கள்) |
| 2. | வாடகை | பொதுப்பணித் துறையின் பரிந்துரையின்பேரில் நிர்ணயிக்கலாம். |
| 3. | மின்சாரக் கட்டணம் | 1,20,000 |
| 4. | எரிபொருள் (டீசல்) | 99,000 |
| 5. | தொலைபேசிக் கட்டணம் | 25,500 |
| | மொத்தம் | 36,39,048 |

**<u>தொடராச் செலவினம்:</u>**

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை | ரூ. |
|---|---|---|---|
| 1. | வாகனம் | 1 | 6,00,000 |
| 2. | கணினி | | 60,000 |
| 3. | தளவாடங்கள் | | 1,50,000 |
| 4. | பிரிண்டர் | 2 | 20,000 |
| 5. | ஜெராக்ஸ் இயந்திரம் | 1 | 50,000 |
| 6. | நிகரி | 1 | 10,000 |
| 7. | தீயணைப்பான் | 2 | 20,000 |
| 8. | குளிர்சாதனம் | 1 | 25,000 |
| 9. | தொலைபேசி இணைப்புக் கட்டணம் | 2 | 6,000 |
| | மொத்தம் | | 9,41,000 |

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்க வேண்டும்.

(அ) <u>பணியாளர் சம்பளங்கள்</u>

<u>வருவாய் பணியிடங்கள்</u>

2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –I திட்டத்தில் சேராதது –AA – உட்கோட்ட பணியாளரமைப்பு

(i) 01 சம்பளங்கள்
(து.தொ.கு 2053 00 094 AA 0104)

(ii) <u>05 அலுவலக செலவுகள் 01 தொலைபேசி கட்டணங்கள் ரூ.31500/–</u>
(தொடரும் செலவினம் ரூ. 25,500/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.6000/–)
(து.தொ.கு 2053 00 094 AA 0515)

(iii) 05 அலுவலக செலவுகள் 03 மின் கட்டணங்கள் ரூ.1,20,000/-
(த.தொ.கு 2053 00 094 AA 0533)

(iv) அறைகலன்கள் ரூ 1,50,000/-
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு 2053 00 094 AA 0551)

(v) 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ. 1,05,000/-
(த.தொ.கு 2053 00 094 AA 1916)

(vi) 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ. 6,00,000/-
(த.தொ.கு 2053 00 094 AA 2111)

(vii) 45-00 பெட்ரோலிய எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய் ரூ. 99,000/-
(த.தொ.கு 2053 00 094 AA 4502)

(viii) 76 கணிணியும் துணை பாகங்களும் 01 வாங்குதல் ரூ.80,000/-
(த.தொ.கு 2053 00 094 AA 7616)

7. மேலே பத்தி 5-இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணியாகும் (New Instrument of Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு ஒப்புதல் பெறும்வரை தேவைப்படும் சரியான தொகையினை கணக்கிட்டு எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு செய்ய தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதி விதிகள் 1963-ன் இணைப்பிலுள்ள படிவம் 'அ'-ன்படி இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2015-2016 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும்பொருட்டு உரிய வரைவு செயற்குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கை, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் கோட்டம் 09.02.2016-ஆம் நாள் முதல் செயல்படும்.

9. புதிய மேலூர் கோட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 5-இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.10090/மை.ம.ஆ.பி நாள் 08.02.2016-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.2194 (இரண்டாயிரத்து நூற்று தொன்னூற்று நான்கு).

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை - 600 079
(அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)

முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5.
கூடுதல் தலைமைச் செயலர்/நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர்/நிலச் சீர்திருத்த ஆணையர்,சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் / ஆணையர் மற்றும் இயக்குநர்,
நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5.
மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை மாவட்டம், மதுரை.
மாவட்ட கருவூல அலுவலர், மதுரை மாவட்டம், மதுரை.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
மாநில கணக்காயர் (CAG) சென்னை–9.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–2.
அனைத்துத் துறை தலைவர்கள் / அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9.
ஆணையர் கருவூலக்கணக்கு துறை, சென்னை–15.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், வருவாய்த்துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
நிதித்(வ.செ.பொது–I/வ.செ.பொது–II/வருவாய்(கக–I)/பொதுப்பணி-I/மை.ம.ஆபி) துறை, சென்னை–9.
நிதி (C.M.P.C) துறை. சென்னை–9
இகோ/உதிரி –2.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 9.2.16.
9/2/16

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண்.63, வருவாய்த்துறை, நாள் 09.02.2016**

## அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், மதுரை மாவட்டத்தில் மதுரை வருவாய் கோட்டத்தை பிரித்து புதிய மேலூர் வருவாய் கோட்டம் 2016 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 09–ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வட்டங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதியதாக உருவாக்கப்படும் மேலூர் வருவாய் கோட்டத்தில் உள்ளடங்கும் வட்டங்கள், அவ்வட்டங்களில் அடங்கும் வருவாய் கிராமங்கள் மீது தற்போது மதுரை வருவாய் கோட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி மேலூர் வருவாய் கோட்டாட்சியரால் 2016 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 09–ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

## அட்டவணை

| வ.எண். | வருவாய் கோட்டத்தின் பெயர் | வட்டங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | மேலூர் | 1. மதுரை கிழக்கு<br>2. மதுரை தெற்கு<br>3. மேலூர் |

**இரா. வெங்கடேசன்,**
**அரசு செயலாளர்.**

**// உண்மை நகல் //**

பிரிவு அலுவலர் 9.2.16
9/2/16